# அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## நேரடி உதவித் திட்டம்

நேரடி உதவித் திட்டம் (DAP) என்பது, கவனிக்கப்படாமல் ஓரங்கட்டப்பட்ட சமூகங்களுக்கு உடனடி நிவாரணங்களை வழங்குவதற்காக, உள்ளூர் சமூகமட்டக் குழுக்களுக்கு, இலாப நோக்கற்ற விதத்தில் வழங்கப்படும் நெகிழ்ச்சிப் போக்குள்ள ஒரு சிறிய மானியத் திட்டமாகும். அபிவிருத்திக் குறிக்கோள்களின் முன்னேற்றம் மற்றும் அதிகமாகத் தேவைப்படும் இடங்களில் மனிதாபிமானக் கஷ்டங்களில் கவனம் செலுத்துதல் என்பனவற்றைக் குறிக்கோள்களாகக் கொண்டதே இந்தத் திட்டமாகும்.

## கவனம் செலுத்தப்படும் பரப்பு

அபிவிருத்தியில் கவனம் செலுத்தும் அதி உயர்தரம் கொண்ட விண்ணப்பங்கள் எம்மால் ஏற்றுக் கொள்ளப்படும். மேலும், இவை இலங்கையிலும், மாலைதீவிலும் சமூகங்களைப் பலப்படுத்துவதாகவும் அமைய வேண்டும்.

பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்தப்படும் திட்டங்களுக்கு நிதியுதவிகளை வழங்குவதற்காக இந்த நேரடி உதவித் திட்டம் திறவலானதாகும்.

- சிறியளவு வருமானம் உருவாக்கல்
- சமூக சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய வசதிகள்
- கல்வி மற்றும் சுயதொழில் பயிற்சிகள்
- சிறியளவு உட்கட்டமைப்பு
- கிராம அபிவிருத்தி
- மகளிர் வலுவூட்டல்
- மனித உரிமை பயிற்சி / கல்வி மற்றும் ஆளுகை
- யுத்தத்துக்குப் பிந்திய மீட்சி

பெண்கள், சிறுவர்கள், அங்கவீன முற்றோர், முதியோர் மற்றும் ஏனைய பாதிக்கப்பட்ட பிரிவினர் விடயத்தில் விஷேட கவனம் செலுத்தப்படும்.

சில சந்தர்ப்பங்களில் கலாசார பாதுகாப்புடன் தொடர்புடைய திட்டங்கள், அபிவிருத்தியோடு தெளிவான தொடர்புடைய விளையாட்டுத் திட்டங்கள் என்பனவும் DAP நிதியுதவியின் போது கவனம் செலுத்தப்படும்.

**வழிகாட்டுதல்கள்**

நேரடி உதவித் திட்டம் பல வழிகாட்டுதல்களைக் கொண்டுள்ளது. நிதியுதவிக்கான விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும் போது பின்வருவனவற்றில் கவனம் செலுத்தப்படும். அவையாவன:

- DAP செயற்பாடுகள் உயர் அபிவிருத்தித் தாக்கங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். எதிர்பார்க்கப்படும் அபிவிருத்தித் தாக்கங்களை விளக்கமாவும், தெளிவாகவும் விண்ணபங்களில் குறிப்பிட வேண்டும்.
- இவற்றின் வடிவாக்கம், அமுலாக்கம் மற்றும் கண்கானிப்பு என்பனவற்றின் போது பயனாளிகளின் பங்களிப்பும் ஈடுபாடும் அமைந்திருக்க வேண்டும்.
- DAP நிதியுதவிகளைப் பெற்றுக் கொள்பவர்கள், திட்டங்களுக்கான தமது சொந்த நியாயமானதோர் பங்களிப்பை பணமாகவோ அல்லது சேவையாகவோ வழங்க வேண்டும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. திட்ட முன்மொழிவுகளின் போது இந்தப் பங்களிப்பின் வகை, அவற்றின் மட்டம் என்பன குறித்தும் குறிப்பிடப்பட வேண்டும்.
- சுய உதவி மற்றும் நிலைத்து நிற்கும் தன்மை என்பனவற்றை நோக்கியதாக திட்டங்கள் அமைய வேண்டும்.
- சமர்ப்பிக்கப்படும் திட்டங்களுக்கு, உள்ளூர் அதிகார மட்ட அங்கீகாரம் உண்டு என்பதற்கான ஆதாரங்களும் வழங்கப்பட வேண்டும்.
- முறையான, நிறுவன ரீதியான ஆதரவு ஏற்பாடுகளும் தெளிவுபடுத்தப்பட வேண்டும் உதாரணமாக உருவாக்கப்படும் மீண்டுவரும் செலவு மட்டம், நீண்டகால அடிப்படையில் இந்தச் செலவுகளைத் தக்கவைத்துக் கொள்ளக் கூடிய ஆற்றலுக்கான ஆதாரம் என்பன.
- மானியத்துக்கான நிபந்தனைகளுக்கு அப்பால் திட்டத்தை அமுல் செய்வதில் உள்ளூர் அதிகாரிகள் அல்லது பயனாளிகளைப் பொறுத்தமட்டில் அவர்களின் அர்ப்பணம், விண்ணப்பத்தின் மூலம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- திட்ட முன்மொழிவுகள், அளவிடக்கூடிய செயற்பாட்டு குறிகாட்டிகள் மற்றும் கண்கானிப்புப் பொறிமுறைகளைக் கொண்டிருக்க வேண்டும்.
- கட்டிட அல்லது நிர்மாணத் துறையுடன் தொடர்புடைய திட்டங்கள், அவுஸ்திரேலிய தரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கட்டிட அல்லது நிர்மாணத்துக்கான ஒரு பொருளாக அஸ்பெஸ்டஸ் பாவிக்கப்படக் கூடாது.
- ஒரு திட்டம் சிறுவர்களோடு பணிபுரியும் வகையில் தொடர்பு பட்டிருந்தால், அந்த நிறுவனம் சிறுவர் பாதுகாப்புக் கொள்கை ஒன்றைக் கட்டாயம் அமுல் செய்தல் வேண்டும்.

**தகைமை**

இலங்கையிலும், மாலைதீவிலும் சட்பூர்வமாகப் பதிவு செய்யப்பட்ட சமூகக் குழுக்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் இலாப நோக்கற்ற விதத்தில் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடும் உள்ளூராட்சி மன்றங்கள் என்பனவற்றுக்கு இந்த நிதியுதவி வழங்கப்படும்.

ஒரு நிதிச் சுற்றுக்காக ஒரு அமைப்பு ஒன்றுக்கும் மேற்பட்ட திட்ட முன்மொழிவுகளையும் சமர்ப்பிக்கலாம்.

பின்வரும் விடயங்களுக்கு DAP நிதிகள் வழங்கப்பட மாட்டா

- இலங்கையிலும், மாலைதீவிலும் மாநாடுகள் அல்லது வெளிநாடுகளில் கற்கை சுற்றுலா பயணங்கள்.
- அவுஸ்திரேலியாவில் கல்விசார் பயிற்சிகள்
- அலுவலக ஊழியர் சம்பளங்கள், அலுவலக வாடகைகள், உபகரணச் செலவுகள், உதிரிப் பாகங்கள், பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவுகள் போன்ற மீள் செலவு தன்மை கொண்டவைகள்.
- நுண் கடன் திட்டங்கள்
- திட்டத்துக்கான செலவின் பாரியளவாக ஆலோசனையாளர்களுக்கான மற்றும் ஆலோசனைகளுக்கான கொடுப்பனவுகள் இருக்கின்ற நிலையில்
- திட்டத்துக்கான நிர்வாகச் செலவு அதன் மொத்தச் செலவிலும் பார்க்க 10% குறைவாக இருக்க வேண்டும். சம்பளங்கள், வாடகைகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஏனைய தனிநபர் செலவுகளுக்கு DAP நிதியுதவி வழங்கப்பட மாட்டாது. திட்டத்தோடு தொடர்புடைய செலவுகளுக்கு மட்டுமே நிதி வழங்கப்படும்.

**மானியம்**

DAP நிதியுதவிகள் இலங்கை நாணயப்படி 30 இலட்சம் ரூபா பெறுமதியானவை. இதைவிட கூடுதல் தொகை கொண்ட திட்டங்களைச் சமர்ப்பிக்க விரும்பும் அமைப்புக்கள், மேலதிக ஆலோசனைகளுக்காக அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகராலயத்தோடு தொடர்புகொள்ள வேண்டும். (தொலைபேசி இலக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன)

**காலப்பகுதி**

DAP மானியங்கள் ஒரு வருட காலத்துக்கு வழங்கப்படும். சமர்ப்பிக்கப்படும் திட்டத்தின் தன்மைகளுக்கு அமைய இரண்டு வருடகால அவகாசம் பற்றியும் கவனம் செலுத்தலாம். நீண்டகாலத் திட்டங்களுக்காக விண்ணப்பிக்கும் ஆர்வம் கொண்ட அமைப்புக்கள் அவ்வாறானதோர் விண்ணப்பத்தை செய்யும் முன் அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகராலயத்தோடு தொடர்பு கொள்ளவும்.

**பொறுப்புக் கூறல் வெளிப்படைத் தன்மை மற்றும் அறிக்கை இடல்**

DAP மானியங்களைப் பெற்றுக் கொள்ளும் எந்தவொரு திட்டமும், அதியுயர் மட்டத்திலான வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக் கூறல் என்பனவற்றைப் பேண வேண்டும் என அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகராலயம் வேண்டுகோள் விடுக்கின்றது. இலக்கு வைக்கப்பட்ட சமூகத்துக்கு நேரடி நன்மைகளை வழங்காத வீண் விரைய ஆபத்து, நிர்வாகச் செலவு மற்றும் ஏனைய செலவுகள் என்பன மட்டுப்படுத்தப்படும்.

DAP நிதியுதவியைப் பெற்றுக் கொள்ளும் ஒரு அமைப்பு -

- மானியத்துக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்று ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட வேண்டும்.
- விண்ணப்பத்தின் இலத்திரனியல் பிரதியொன்றை சமர்ப்பிக்க வேண்டும்.

- சகல செலவுகளும் பற்றி நிதிப் பதிவுகள் வைத்திருக்கப்பட வேண்டும் (பற்றுச் சீட்டுக்கள் உட்பட)
- உங்கள் நிதி உதவியைப் பெற்றுக் கொண்ட ஆறு மாத காலத்துக்குள் முன்னேற்ற அறிக்கையொன்றை சமர்ப்பிக்க வேண்டும்.
- திட்டம் முடிவடைந்ததும் முழு அளவிலான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும். (பற்றுச் சீட்டுக்கள் உட்பட)

**விண்ணப்பித்தல் செயற்பாடு**

நிதியுதவியைப் பெற்றுக்கொள்ள அமைப்புக்கள் DAP விண்ணப்பத்தை முழுமையாகப் பூர்த்தி செய்ய வேண்டும். (படிவத்துக்கான தொடர்பொன்றை ஏற்படுத்தவும்) சிங்களம், ஆங்கிலம் தமிழ் ஆகிய மொழிகளில் விண்ணப்பங்கள் உள்ளன.

விண்ணப்பத்தை எந்த நேரத்திலேனும் சமர்ப்பிக்கலாம். ஒவ்வொரு வருடமும் மார்ச் மற்றும் நவம்பர் மாதங்களில் மானியச் சுற்றுக்காக விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும்.

விண்ணப்பங்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியவை -

- திட்டத்தின் குறிக்கோள்கள் பற்றிய தெளிவான விளக்கமும், அதனால் யார் பயன் அடைகின்றார்கள் என்பது பற்றிய விபரமும்.
- திட்டம் எவ்வாறு அமுல் செய்யப்படும் என்பது பற்றிய விபரம்.
- இவ்வாறான திட்டங்களை வெற்றிகரமாக அமுல் செய்வதில் உங்கள் அமைப்புக்கு உள்ள செயல்முறை ரீதியான அனுபவம் பற்றிய விளக்கம்.
- யதார்த்தபூர்வமான மற்றும் நியாயமான செலவுகளை உள்ளடக்கிய விரிவானதோர் பாதீடு.
- உங்கள் அமைப்பைப் பற்றி சாதகமாகவும், அறிவு பூர்வமாகவும் பேசக் கூடிய நற்சான்று வழங்கக் கூடியவர்கள் மற்றும் முன்னாள் நன்கொடையாளர்களை தொடர்புகொள்ளக் கூடிய விவரம் (மின்னஞ்சல் விவரம் உள்ளடங்களாக)
- நிதியை நீங்கள் எவ்வாறு ஏற்றுக் கொள்வீர்கள் என்பதை விளங்கப்படுத்தவும் (நிதியில் ஒரு சிறு தொகையை நீங்கள் ‘இது அவுஸ்திலேய அரசாங்கத்தின் உதவித் திட்டம்’ என்பதை புலப்படுத்த ஒதுக்கலாம். உதாரணம், புத்தகங்ளை நன்கொடையாக வழங்கல் மற்றும் ஊடகச் செயற்பாடுகள்)

**தொடர்புகள்**

விண்ணப்பங்களை மின்னஞ்சல் மூலமாக அல்லது பிரதியாக அனுப்பலாம்.

இலங்கையின் சப்பிரகமுவ, தென் மற்றும் ஊவா மாகாணங்களுக்கான திட்டங்கள் பின்வரும் நபருக்கு முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும்.

**திரு. நாமல் பெரேரா**
அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயம்
இல.21, ஸ்ரீமத் ஆர்.ஜீ.சேனாநாயக்க மாவத்தை,
கொழும்பு 07

தொலைபேசி: + 94 11 2463242
தொலைநகல்: + 94 11 2686939
மின்னஞ்சல்: namal.perera@dfat.gov.au

மாலைதீவு மற்றும் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண திட்டங்களை பின்வரும் நபருக்கு முகவரியிட்டு அனுப்புதல் வேண்டும்.

**செல்வி. நஸ்ரின் மரிக்கார்**
அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயம்
இல.21, ஸ்ரீமத் ஆர்.ஜீ.சேனாநாயக்க மாவத்தை,
கொழும்பு 07

தொலைபேசி: + 94 11 2463243
தொலைநகல்: + 94 11 2686939
மின்னஞ்சல்: nazreen.marikkar@dfat.gov.au

இலங்கையின் மத்திய, வட மேற்கு மற்றும் வட மத்திய மாகாண திட்டங்களை பின்வரும் நபருக்கு முகவரியிட்டு அனுப்புதல் வேண்டும்.

**செல்வி சோனாலி கருணாரட்ண**
அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயம்
இல.21, ஸ்ரீமத் ஆர்.ஜீ.சேனாநாயக்க மாவத்தை,
கொழும்பு 07

தொலைபேசி: + 94 11 2463301
தொலைநகல்: + 94 11 2686939
மின்னஞ்சல்: sonali.karunaratne@dfat.gov.au

அதி உயர்தரம் கொண்ட பெருந்தொகை விண்ணப்பங்கள் எமக்கு கிடைத்து வருகின்றன. நாம் அவற்றுக்கு உரிய நேரத்தை வழங்கி, அவற்றை மிகக் கவனமாகப் பரிசீலித்து வருகின்றோம்.

திட்டங்களைச் சமர்ப்பித்துள்ள, தெரிவு செய்யப்பட்ட அமைப்புக்களுடன் மட்டுமே தொடர்புகள் மேற்கொள்ளப்படும். 2014-2015 விண்ணப்பக் காலம் முடிவடைந்து எட்டு மாதங்களுக்குள் உங்களோடு நாம் எந்தத் தொடர்பும் கொள்ளவிட்டால், உங்கள் விண்ணப்பம் வெற்றியளிக்கவில்லை என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.